விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 03 இதழ் 34
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16 — 03 — 1993

சீக்கிய போராளிகள் பம்பாய் குண்டு வெடிப்புக்கு உரிமை கோருகின்றனர்

(புதுடில்லி)

பம்பாயில் கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்ந்த பாரிய குண்டு வெடிப்புக்கு, தாமே பொறுப்பு என்று சீக்கியப் போராளிக் குழுவொன்று உரிமை கோரியுள்ளது.

(4-ம் பக்கம் பார்)

குண்டுகள் வெடித்ததற்கு இரு முஸ்லிம்கள் பொறுப்பு

(பம்பாய்)

பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்தை பம்பாயிலுள்ள கடத்தல் மன்னர்கள் என்று கூறப்படும் ஜக்குன், நோமன் என்ற இரு முஸ்லிம் சகோதரர்களே செய்துள்ளார்கள் என்று பம்பாயிலிருந்து வெளிவரும் பிரபலமான ஆங்கிலச்

(4ம் பக்கம் பார்க்க)

இருவர் கைது

(புதுடில்லி)

பம்பாயில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இருவரைக் கைது செய்துள்ளதாக பம்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் பம்பாயில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கும், நியூ

(4ம் பக்கம் பார்க்க)

● மன்னார் - திருமலையில்

ராணுவ கட்டுப்பாட்டு பகுதியில்

புலிகள் திடீர் அதிரடித் தாக்குதல்

மூன்று பொலிஸார் பலி

(யாழ்ப்பாணம்)

மன்னார் பேசாலை, திருகோணமலை ஆகிய பகுதிகளில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் நேற்று திடீர் அதிரடித் தாக்குதல்களை மேற்கொண்டனர். பொலிஸ் காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதல்களில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர். மூன்று பொலிஸார் படுகாயம் அடைந்தனர்.

(4ம் பக்கம் பார்க்க)

பம்பாயில்

பங்குச் சந்தை கட்டடம் திறக்கப்பட்டது

(பம்பாய்)

கடந்த வெள்ளிக்கிழமை குண்டு வெடிப்புக்கு இலக்கான பம்பாய் பங்குச்சந்தை கட்டடம் நேற்று மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.

மகாராஷ்ட்ர முதல்வர் திரு. சரத் பவார் இதனைத் திறந்து வைத்தார்.

நேற்று பங்குச்சந்தை வியாபாரம் பம்பாயில் சுறுசுறுப்

(4ம் பக்கம் பார்க்க)

★ ஐந்து கட்சிகள் இணைந்து

சிறிமா தலைமையில் புதிய கூட்டு முன்னணி உதயம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் வை. பி. பிரிவு, தேசவிமுக்தி ஜனதா கட்சி ஆகியவை இணைந்த எதிர்க்கட்சிகளின் கூட்டணி நேற்று தேர்தல் ஆணையாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது.

தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி. சில்வா இந்த புதிய கூட்டணியை பதிவு செய்தார்.

பொதுசன தேசிய முன்னணி என்ற பெயரில் இந்த கூட்டணி பதிவாகியுள்ளது.

இந்தக் கட்சியை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்த தேர்தல் ஆணையாளர், கட்சியின் தேர்தல் சின்னமாக கதிரையை அங்கீகரித்துள்ளார்.

இந்தப் புதிய கட்சியின் தலைவியாக திருமதி சிறி

(4ம் பக்கம் பார்க்க)

பூநகரிப் பாதை விவகாரம்:

ஐ. நா. அரசு அதிகாரிகள் பேச்சு

(கொழும்பு)

பூநகரி - சங்குப்பிட்டி பாதை தொடர்பான பேச்சுக்களை, அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரி பீற்றஸ் நீக்கிலஸ் கடந்த வாரம் கொழும்பில் அரச அதிகாரிகளுடன் நடாத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

பூநகரி-சங்குப்பிட்டி பாதை ஊடாக அத்தியாவசியப் பொருட்களை, அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகளின் மேற்பார்வையில் யாழ். குடாநாட்டிற்குள் கொண்டுவருவதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்து

(4ம் பக்கம் பார்க்க)

அ. தி. மு. க. ஆட்சியை கவிழ்க்க

இ. காங்கிரஸ் முயற்சி

ஜனதா கட்சி குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழகத்தில் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. ஆட்சியை கவிழ்ப்பதற்கு இந்திரா காங்கிரஸ் கட்சி முயற்சிக்கின்றது என பாரதீய ஜனதாக்கட்சியின் செயலாளர் சி. பி. மார்சு குற்றம் சாட்டியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு மாவட்டத்தில்

ஸ்ரீலங்கா படையினரின் படுகொலைகள் தொடர்கின்றன

(மட்டக்களப்பு)

"மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்டுவரும் மனிதப் படுகொலைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. நாகரிக உலகம் மிகக்கொடூரமான மனிதப் படுகொலைகளை ஸ்ரீலங்காப் பாதுகாப்புப்படையினர் தொடர்ந்து புரிந்துவருகின்றனர்". மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு அண்மையில் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழக சட்டப் பேரவையில் நேற்றும் கூச்சல் குழப்பம்

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையில் நேற்றும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் கடந்த வெள்ளிக்கிழமை சட்டப் பேரவை உறுப்பினர் விடுதியில் தாம் தாக்கப்பட்டது குறித்து பேசுகையில், தமது தொகுதியில் நடந்த வெள்ள நிவாரணப் பணிகளில் ஏற்பட்ட முறைகேடுகள் குறித்து தாம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் குறை கூறிய போது, அ. தி. மு. க. சட்டப் பேரவை உறுப்பினர் ஒருவர், தாம் சட்டப்பேரவையிலிருந்து ஒழுங்காக திரும்பமுடியாது என்று பொதுக்கூட்டத்தில் பேசியுள்ளார் என்று கூறினார்.

அப்போது அ. தி. மு. க உறுப்பினர்கள் சம்பந்தமில்

4-ம் பக்கம் பார்க்க)

இளாலி கடற்பரப்பில்

3 கடற்புலிகள் உட்பட ஏழு புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

இளாலி கடற்பரப்பில் 16-12-92 அன்று ஸ்ரீலங்கா கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று கடற்புலிகள் உட்பட ஏழுபுலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

(2ம் பக்கம் பார்க்க)

[illegible]
யாழ்ப்பாண பொதுநூலகம்

வரிவிளம்பரம்

சேவை

ஸ்ரீ காந்தா அச்சகம் ஸ்ரீலங்கா அச்சக அதிபரின் மேற்பார்வையில் நடைபெறுவதால் உங்கள் அவசர தேவைகள் எதுவானாலும் அழகுற செய்து கொள்வதற்கு நாடுங்கள். ஸ்ரீகாந்தா அச்சக லேன்-யாழ்ப்பாணம். (எ-2965)

FOLLOW ME

ரெலிவிசன், வானொலியில் ஒலிபரப்பாகும் ஆங்கில பாட நிகழ்ச்சி தொடர்புத்தகம் வெளிவந்து விற்பனையாகின்றது. பாலாஜி புத்தகசாலை 16, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (எ-2956)

சமையல்காரர் தேவை

யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டருக்கு முன்னாலுள்ள ரவி கோப்பி பாருக்கு சகல உணவுவகைகளையும் தயாரிக்கக்கூடிய நல்ல சமையலாளர்கள் தேவை. நேரில் வரவும். திறமையின் அடிப்படையில் சம்பளம் பேசித்தீர்க்கலாம். (எ- 2964)

மீண்டும் இயங்குகிறது

சோதிட விலாசபுத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம் சோதிட, வைத்திய, விஞ்ஞான புத்தகங்களும் பாடசாலைப்புத்தகங்களும், உபகரணங்களும் விற்பனையாகின்றன. ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சோதிடப்பிரகாச அச்சு யந்திரசாலை, கொக்குவில். (எ-2955)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

இராசி பலன்

16-03-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு பங்குனி 03)

நவமி பி. இ. 3-51 வரை மூலம் பி. ப. 2-11 வரை இராகுகாலம் மாலை 3-21 முதல் 4-57 வரை சுபநேரம் காலை 10-51 முதல் 12-21 வரை.

மேடம்; மாதர் பகை, ஆபாசம், தொழில் தகராறு

இடபம்: கொடிய பகை, கண்துடைப்பு இனசன வெறுப்பு

மிதுனம்: உயர்ந்த அந்தஸ்து, குடும்பசுகம், மனமகிழ்ச்சி.

கடகம்: காரிய ஜெயம், அதிகாரிகள் சிறப்பு, நற்செய்தி

சிம்மம்: சொற்பேர், மனக்குறை, பயண அலைச்சல்.

கன்னி: இடம்விட்டுப் போதல், உடல் வியாதி, கண்டிப்பு.

துலாம்: தர்மகாரியம், தொழில் சிறப்பு, சகோதர நன்மை.

விருச்சிகம்: மனவிரக்தி, தென் திசை பயணம், தடுமாற்றம்.

தனுசு: தீராத பகை, தொழில் முடக்கம், வாக்கு வசீகரம்.

மகரம்: மனைவியால் துன்பம், பந்துக்கள் செலவு, கருத்து முரண்பாடு.

கும்பம்: செய்தொழில் பலிதம், பணவரவு, நண்பர் வருகை.

மீனம்: புத்திரர் நன்மை, தெய்வ பிரார்த்தனை, நோய் நிவர்த்தி.

ஜோசியர்

பயிற்சி

Basic, d Base III + Lotus 1, 2 3, Word Processing பயில விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Unikco Computer Center, 87, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2968)

செயல் நூல் ஆண்டு-7

"வரலாறும் சமூகக்கல்வியும்" வெளிவந்து விட்டது. 500 வினாவிடைகள், செயற்பாடுகளுக்கு விடைகள். நான்கு மாதிரி தவணைப் பரீட்சை வினாத்தாள் (முதலாம் தவணைக்கு இரண்டு) விடைகள் விலை ரூபா 32/- ஆக்கம்: நா. மயில்வாகனம் சென்ஜோன்ஸ் கல்லூரி. (சி-4023)

லொறி மோதி சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தாவடியில் லொறியினால் மோதப்பட்டு படுகாயமடைந்த சிறுவன் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாவடி மேற்கைச் சேர்ந்த மனோகரன் தர்சன் (8-வயது) என்ற சிறுவனே லொறியினால் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்தவராவார். (56)

உதைபந்தாட்டம்

(அரியாலை)

யாழ் நாவாந்துறை சென். மேரீஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் 9 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் 18ம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகிறது. அன்று மாலை 3 மணிக்கு சென் நீக்கிலஸ் (பி) அணி எதிர் ஜோன் கெனடி விளையாட்டுக் கழகம் நாவாந்துறை விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ளன. (59)

நடமாடும் வைத்திய சேவை

(தாளையடி)

அண்மைக்கால இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்துவந்து அம்பன் கொட்டோடைக் கிராமத்தில் தமிழர்புனர் வாழ்வுக் கழகத்தினரால் அமைக்கப்பட்ட தற்காலிக வதிவிடக் குடிசைகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணக்கிளையின் நடமாடும் வைத்திய சேவைப் பிரிவினர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் வைத்தியசேவை அளித்துவருகின்றனர். (163)

சைக்கிள் திருட்டு

(நெல்லியடி)

பருத்தித்துறையில் பன்னக்கட்டை என்னுமிடத்திலுள்ள வீடு ஒன்றின் முன் விறாந்தையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சுமார் ஆறாயிரம்பெறுமதியான துவிச்சக்கர வண்டியொன்று கடந்த மாதம் 25-ம் திகதி இரவு இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டு தொடர்பாக பருத்தித்துறை காவல் பணிமனையில் புகார் செய்யப்பட்டுள்ளது. (160 – ரி)

ஆடைத் தொழிற்சாலையும் தமிழ் மக்களின் அவலமும்

(மட்டக்களப்பு)

தமிழர்களின் நலனுக்காகவே மட்டக்களப்பில் ஆடைத்தொழிற்சாலை நிறுவப்படுகின்றது. இதனால் தமிழ் இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பு பெறுகின்றனர் என்றும் ஸ்ரீலங்கா அரசு தெரிவிக்கின்றது.

ஆனால் மட்டக்களப்புமாவட்டத்தில் மக்களின் பிரதான தொழிலாகிய விவசாயம் சீர்குலைக்கப்படுகிறது. நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள ஏழை விவசாயத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அறுவடைக்குச் செல்லும் தொழிலாளர் தாக்கப்படுகின்றனர். வயலில் வைக்கப்படும் நெற்சூடுகள் சிங்கள ராணுவத்தால் எரியூட்டப்படுகின்றன. வாகனங்களில் ஏற்றிச்செல்லப்படுகின்ற நெல் மூடைகள் சிங்கள ராணுவத்தால் சூறையாடப்படுகின்றது.

அரைவாசிக்குமேற்பட்ட விவசாய நிலங்கள் பாதுகாப்பின்மை காரணமாக தரிசாகிக்கிடக்கின்றன. மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் எல்லைகள் மட்டுப்படுத்தப்படுகின்றது. தொழிலில் ஈடுபடுபவர்கள் சிங்கள ராணுவத்தால் கைதுசெய்யப்படுவதும்காணாமல் போவதும் கொடூரமான முறையில் கொலை செய்யப்படுவதும் வழக்கமாக நடைபெறுகின்றன.

மாவட்டத்தின் பிரதான தொழில்களில் தமிழ்மக்கள் ஈடுபடுவதற்கு பாதுகாப்பற்ற ஓர் நிலையைதோற்றுவித்துள்ள சிங்கள அரசு ஆடைத்தொழிற்சாலை நிறுவுதல் மூலமாக தமிழ்மக்களுக்குவேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறுவது எவ்வளவு வேடிக்கையானதாகவுள்ளது.

மாவட்டத்திலுள்ள கிராமப்பகுதிகளில் தமிழ்த் தொழிலாளர்கள்தாக்கப்பட்டும்கொல்லப்பட்டும், பாதுகாப்பற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது நகரில் மாத்திரம் ஒரு ஆடை தொழிற்சாலை அமைத்து கிழக்குத்தமிழ் மக்களனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்கவுள்ளது பற்றி ஸ்ரீலங்கா அரசு பேசுவது அரசின் கபடத்தன்மையை எமக்கு உணர்த்துகின்றது என்பதை தெளிவுபடுத்துகின்றோம்.

கிழக்கு தமிழர் ஒன்றியம்

கருத்தரங்கு

(நெல்லியடி)

பல வருட காலமாக மலைநாட்டுத் தோட்டப் பாடசாலையில் கற்பித்த பின் அரசாங்க பாடசாலையில் தமது ஆசிரிய சேவையைப் புரிந்து வரும் சுமார் 50க்கு மேற்பட்ட ஆசிரியர்களின் ஓய்வூதியம் சம்பந்தமான விடயங்கள் சார்பாக வடமராட்சி கோட்டத்தில் ஆராயப்பட்டது.

கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். செல்லத்துரை கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் இவ் ஆசிரியர்களை நிரந்தர நியமனம் செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. (160)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

வெளியீடுகள்

பின்வரும் நூல்கள் விற்பனைக்கு உண்டு. தேவையானோர் நிர்வாகக் கிளை உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்க.

1. வித்துவ சிரோமணி சி. கணேசையரது வாழ்க்கையும் பணியும்—கி. சிவலிங்கராசா (ரூபா 30/-)
2. பண்டைய தமிழகம் —கலாநிதி சி. க. சிற்றம்பலம் (ரூபா 375/-)
3. நூலகவியலிற்பட்டியலாக்கம் — விமலாம்பிகை பாலசுந்தரம் (ரூபா 60/)
4. Political Communication and the Electoral Process— Dr S. K. S Nathan Rs. 35/-
5. யாழ்ப்பாண இராச்சியம் — பதிப்பாசிரியர்: கலாநிதி சி. க. சிற்றம்பலம் (ரூபா 450/-)

பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1993 03 12. (ஏ-2967)

ஒய்வூதிய கொடுப்பனவு

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு—நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான மார்ச் மாத கொடுப்பனவு தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ளமேற்படி சங்ககிராமவங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருகின்றது. (101)

கிளாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம் மோதலில் மேஜர் பூபாலன் (சிவசுப்பிரமணியம் சிவகுமார், கிறீன்வீதி, திருகோணமலை), கப்டன் புரவலன் (சகாங்கன்) (வெள்ளைக்குட்டி பூபாலப்பிள்ளை, தம்பலவத்தை, மண்டூர் - மட்டக்களப்பு), கப்டன் மகேஸ் (மகேஸ்வரன் அருள்ராஜா, உறுகாமம், கரடியனாறு - மட்டக்களப்பு), கப்டன் மகேஸ்வரன் (மகேஸ்) (குலசிங்கம் ஸ்ரீபன் டெல்மன், 15, மக்கசர் வீதி, உவர்மலை திருகோணமலை) கடற்புலி கப்டன் அறிவழகன் (சாஜகான்) (சந்தியாப்பிள்ளை ஜோன்சன் (றெஜீஸ்) கடற்கரை வீதி, தாழவுபாடு மன்னார், கடற்புலி லெப். கலியுகன் (கலீம்) (சச்சிதானந்தம் கிருஷ்ணகுமார், வல்லை வீதி, அச்சுவேலி வடக்கு யாழ்ப்பாணம், கடற்புலி லெப். வெற்றி (நடராசா சுப்பிரமணியம் (குண்டன்) மணற்காடு, குடத்தனை யாழ்ப்பாணம் ஆகியோர் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (கி)

தமிழ்த்துறை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையினால் இம்மாதம் 18ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல்2-30மணிக்கு "ஈழத்துத்தமிழ் இலக்கியத்தில் தேசிய இனங்களுக்கிடையேயுள்ள பிரச்சினைகளின் பிரதிபலிப்பு" என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது.

பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கிற்கு தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை தாங்குவார். யாழ்ப்பாணம் கல்விக்கோட்ட ஆசிரியரும், தமிழ்-சேவைக்காலப் பயிற்சி ஆலோசகருமான திரு. செ. திருநாவுக்கரசு கருத்துரை வழங்குவார். (மி)

கலை, விவசாய

விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலையின் 74-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவையொட்டி கலை, விவசாய, விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன.

நாடகம், கட்டுரை, சிறுகதை, பேச்சு, கவிதை, நடனம் போன்ற கலைப்போட்டிகளும், வீட்டுத்தோட்டம், கோழிவளர்ப்பு, கால்நடை வளர்ப்பு போன்ற விவசாயப் போட்டிகளும், எறிபந்து, கரப்பந்து, தாச்சி, சடுகுடு, கிட்டியடி முதலான விளையாட்டுப்போட்டிகளும் இவற்

(4-ம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவில்—

மகளிர்தின எழுச்சி விழா

(முல்லைத்தீவு)

முல்லை. மணலாறு மாவட்டத்தில் நடந்த மகளிர் எழுச்சி விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றினார்கள். புதுக்குடியிருப்பு நெடுங்கேணி, ஒட்டிசுட்டான் மணலாறு ஆகிய பகுதிகளிலிருந்து வந்த மக்களின் பேரணி முள்ளியவளை காட்டு விநாயகர் கோவிலிருந்து ஆரம்பமானது.

மாணவர் பாண்ட் வாத்தியம் இசை முழங்க மகளிர் படைப்பிரிவினர் அணிவகுப்பு இடம்பெற்றது.

பெண்கள் சிவப்பு வர்ண உடைகளணிந்து கைகளில் பதாகைகளைத் தாங்கிய வண்ணம் கோஷங்களை எழுப்பிய வண்ணம் ஊர்வலத்தில் சென்றனர்.

ஊர்வலத்தை தொடர்ந்து வித்தியானந்த கல்லூரி மைதானத்தில் விழா ஆரம்பமானது.

முல்லை-மணலாறு மாவட்ட சிறப்புத் தளபதி அன்பு தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

மகளிர் அமைப்பைச் சேர்ந்த திசஞ தலைமையில் நடந்த விழாவில் மகளிர் அமைப்பு பதில் பொறுப்பாளர் ரதி, திருமதி பத்மா முருகையா, முல்லை. மணலாறு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இரா. தமிழன்பன் முல்லை. பதில் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் வண்ணன் ஆகியோர் உரையாற்றினர்.

சில்லாலை

அத்தனாசியார்பிரதமவைத்தியசாலை

14 - 03 - 1993 தொடக்கம்
124, ஆடியபாதம் வீதி, நல்லூர்.
(கல்வியங்காடு சந்தியிலிருந்து 100 மீற்றர்)
(S. சுப்பிரமணியம் கொம்பனி முன்பாக)
சிகிச்சை நேரம்:
காலை 7-00 மணி-1-00 மணி. பி.ப 3-30 மணி- 6 00 மணி
(ஞாயிறு பி. ப. லீவு நாள்)
வைத்திய கலாநிதி எமில் அத்தனாசியார்
(சி-4019)

யாழ். குடாவில் இனப் படுகொலையை தீவிரமாக்க

சிங்கள இராணுவம் திட்டமிட்டு வருகிறது

(யாழ்ப்பாணம்)

தென் தமிழீழத்தில் பெரும் அழிவுகளையும் இனப்படுகொலைகளையும், இராணுவ ஆக்கிரமிப்பையும் மேற்கொண்டுள்ள சிங்களப்படைகள் வட தமிழீழத்தைப் பொறுத்தவரை இனப்படுகொலையைத் தீவிரப்படுத்த முயன்றுவருகிறது.

இவ்வாறு 'விடுதலைப்புலிகள்' மார்ச் மாத இதழில் படையினரின் இனஅழிப்புக்கு குடாநாடு இலக்காகுமா? என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அடுத்த கட்டமாக வடதமிழீழத்தில் குறிப்பாக யாழ். குடாநாட்டினுள் பெரிய அளவில் இனப்படுகொலையைச் செய்து விடுதலைப் போராட்டத்தை நசுக்க சிங்களப் படைகள் ஆயத்தங்களை செய்துகொண்டிருக்கின்றன.

கிளாலி கடற்பயணத்தை தடைசெய்தும், சிங்களப் படைகளை விலக்காமல் பூநரி பாதையை திறந்தும் அதற்குரிய உகந்த சூழலை உருவாக்குவதில் சிங்கள அரசு தீவிரமாக வேலைசெய்துவருகிறது.

இப்படையெடுப்பிற்காகவே பல நவீன போர் விமானங்களையும், உலங்கு வானூர்திகளையும், கடற்படை விசைப் படகுகளையும் கொள்வனவு செய்துள்ளதுடன் புதிதாக ஆட்களையும் படைக்கு திரட்டி வருகிறது.

இப்படையெடுப்பு சிங்கள அரசு எதிர்பார்ப்பது போல் வெற்றியாக அமையுமானால் தென்தமிழீழத்தில் சிங்களப் படைகள் செய்த அட்டூழியங்களை விட நூறு மடங்கு கொடுமைகளை குடாநாட்டில் அவை மேற்கொள்ளும்.

ஏனெனில் குடாநாடுதான் புலிகளின் கோட்டை என்றும் போராட்டத்தின் இதயமென்றும் போருக்கு வேண்டிய ஆள், பொருளாதார பலம் இங்குதான் உண்டென்றும் சிங்கள அரசு கருதுகின்றது. எனவே இதயத்தை பிடுங்கி கோட்டையை உடைத்து தமிழர்களின் பலத்தைக் குறைக்க பாரிய தமிழ் இனப்படுகொலையில் சிங்கள ஆயுதப் படைகள் ஈடுபடும்.

இத்தகையதொரு படுகொலைக்கு ஊக்கம் கொடுப்பது போலவே சிங்களதேசத்தின் பெரும்பாலான பத்திரிகைகளும் அரசியல்வாதிகளும் பௌத்த மதத்தலைவர்களும் புத்திஜீவிகளும் எழுதியும்பேசியும் சிங்கள இனத்திற்கு மேலும் மேலும் இனவெறியூட்டி, பல்லாயிரம் சிங்கள இளைஞர்களைப் படையிலும் சேர்த்து வருகின்றனர்

இந்த இன அழிப்பு போருக்காக பெருந்தொகையான பணத்தை ஒதுக்கவும், சிங்கள தேசம் தயாராகவே உள்ளது. 'போர்மூலம்' தான் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டும் என சிங்கள தேசம் ஒருமித்த குரலில் கூறுகின்றது. 'போர் மூலம்' என்பதன் பொருள் 'தமிழ் இனப்படுகொலை மூலம்' என்பதே ஆகும். (கி)

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்க்கு பிரஜாவுரிமை

(கொழும்பு)

வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்றுவாழும் இலங்கையருக்கு மீண்டும் இலங்கையில் பிரஜாவுரிமை வழங்குவதற்கு தற்போது நாடாளுமன்றில் கொண்டுவந்துள்ள சட்டமூலம் வழிவகுக்கிறது

பிரஜாவுரிமை திருத்தச் சட்டமூலம் குடிவரவு குடியகல்வு திருத்தச் சட்டமூலம் சம்பந்தமான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நீதி உயர்கல்வி அமைச்சர் ஏ. ஸி எஸ். ஹமீட் இதனைத் தெரிவித்தார். (கே-கி)

கல்முனை, பூநகரி படையினர் கடும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கல்முனை பூநகரிப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் யாழ். கடலோரப்பகுதியை நோக்கி நேற்றுமுன்தினம் காலை 5 30 மணியளவில் கடும் ஷெல்தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அரைமணிநேரம் தாக்குதலை மேற்கொண்டபடையினரின் ஷெல்கள் குடியிருப்புப்பகுதியில்வீழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் ஐந்திற்கும் மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. (56)

துப்பாக்கிச் சூடு வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் காலை இடைக்காட்டுப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் குடியிருப்புப்பகுதிகளை நோக்கி மேற்கொண்ட கடும் துப்பாக்கிப் பிரயோகத்தினால் தோட்டப் பகுதியில் வேலை செய்துகொண்டிருந்த வயோதிபர் ஒருவர் பலத்த காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இடைக்காடு பாடசாலை வீதியைச் சேர்ந்த ஆ. கந்தையா (77வயது) என்பவரே காயமடைந்தவராவார். (56-கி)

சூசையப்பர் திருநாள்

(கொழும்புத்துறை)

புனித சூசையப்பர் திருநாள் வழமை போல் நடைபெறவுள்ளது.

வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிதொடக்கம் 3 நாட்களுக்கு மாலை ஆராதனைகள் பங்குத்தந்தை வணதரம் அடிகளார் தலைமையில் நடைபெறும்.

எதிர்வரும் 19ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5-30 மணிக்குத் திருநாட் பூசைப் பலியும் ஒப்புக்கொடுப்பதுடன் விழா நிறைவுபெறும். (59-154)

சித்த மருத்துவ மாணவர் குழு

கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் மன்றத்தின் உயர்மட்டக் குழு ஒன்று குமணகப்பல் மூலம் கொழும்பு சென்று தமது துறைக்குரிய இடர்பாடுகளை குறித்து கல்விஅமைச்சுக்களுடன் உரையாடவுள்ளனர்.

மாணவர் மன்றத்தின் தலைவர் திரு. நா. வர்ணகுலேந்திரன் தலைமையில்செல்லும் இக்குழுவில் திரு. தி. சர்வானந்தன், செல்வி ம. மனோரஞ்சிதமலர், திரு க ஸ்ரீதரன் ஆகியோர் அடங்குகின்றனர்.

மேற்படி குழுவினர். உயர்கல்வி அமைச்சர் ஏ சி எஸ். ஹமீத்துடனும், சுதேசவைத்திய அமைச்சர் டபிள்யூ ஜே. எம். லொக்குபண்டாரவுடனும் கைதடி சித்த மருத்துவ போதனாவைத்தியசாலையின் அபிவிருத்தி, பல்கலைக்கழக சுதேச மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு, சம்பள அளவுத்திட்டம், பாடத்திட்ட அமைப்புக்கள் போன்ற பல விடயங்கள்குறித்து தெளிவாக விளக்குவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (158-கி)

தவக்கால நற்சிந்தனை

"வருந்துகின்ற உள்ளத்தோடும் தாழ்மையான சிந்தையோடும் உள்ள எங்களை ஏற்றருளும்" (தானி 3:39) அன்று அசரியாஸின் செபம் இன்று எமக்கும் மிக மிகப் பொருந்தும். பாவங்களின் காரணமாக நாம் நலிந்து விட்டோம். தாழ்வடைந்து விட்டோம். இன்னல்களுக்காளாகி விட்டோம். ஆகவே வருந்துகின்ற உள்ளத்தோடும் தாழ்மையான சிந்தையோடும் இறைவனின் சரண் அடைவோம்.

மோ. தா.

அத்தியாவசிய பொருள்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் நடமாடும் வர்த்தக நிலையம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் யாழ் மாவட்டத்தின் பல பாகங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக கீழ்வரும் இடங்களில் இந்தப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

16-ந் திகதி அண்ணா சனசமூகநிலையம், உடுவில் கிழக்கு.

17-ந் திகதி தாவடி வடக்கு புளிகிட்டி.

18-ந் திகதி காளிகோவிலடி, தாவடி.

19-ந் திகதி கலாஜோதி சனசமூகநிலையம், இணுவில்.

மேற்படி இடங்களில் பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை பொருட்கள் வழங்கப்படும். (கி)

ஜெனரேற்றர் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள ஜெனரேற்றர் ஒன்று திருட்டுப்போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

ஜெனரேற்றர் பாவனையிலிருந்த போது இரண்டு நாட்களுக்கு முன்னர் களவுபோயிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

வடக்கில் கடும் வரட்சி

(அரியாலை)

யாழ். மாவட்டத்தில் கடும் வரட்சி நிலவுகிறது. குளம் குன்றுகள் ஆகிய நீர்நிலைகள் வற்றியுள்ளன. கால் நடைகள் புல்பூண்டு இன்றி அலைந்து திரிகின்றன.

கடும் வரட்சியினால் கண்நோய் உட்பட வெப்பநோய்கள் அதிகரித்துள்ளன. 59)

கொப்பிகள் விநியோகம்

(உடுவில்)

யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையத்தினர் இடம்பெயர்ந்து வாழும் பல ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு அவ்வப் பகுதி பங்குத்தந்தையர்கள் மூலமாக அப்பியாசக் கொப்பிகளையும், சீருடைகளையும் வழங்கியுள்ளனர். (109)

மூளை மலேரியா காய்ச்சல்

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில்மலேரியாக்காய்ச்சல் வெகுவேகமாகப் பரவி வருகிறது. இந்நோயினால் பீடிக்கப்பட்டபலர் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். நோயினால் பீடிக்கப்பட்டோரின் இரத்தம் பரிசோதிக்கப்பட்டபோது இவர்களில் சிலருக்கு மூளை மலேரியாக் காய்ச்சல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. - 163

இன்று

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு பூர்த்தி நாளும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று 16ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 2 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அரங்கில் நடைபெறும். (சு)

0 0 0 0

(உடுவில்)

சுந்தரரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் இன்று 16ம் தேதி செவ்வாய்க்கிழமை பி. ப. 1-30 மணியளவில் அதிபர் திரு. க. செல்வக்குமாரன் தலைமையில் நடைபெறும். (108)

32,000 தொழிலாளருக்கு தாய்வானில் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

தாய்வான் 32,000 தொழிலாளர்களை தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து வேலைக்கமர்த்தவுள்ளது.

1991ல் இந்தோனேசியா. மலேசியா. பிலிப்பைபைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து 15,000 பேரை ஏற்கனவே வேலைக்கமர்த்தியதிலிருந்து 68 வகையான தொழில்களில் இவர்கள் அமர்த்தப்படுவர். (159-ரி)

காணாமற்போன தாலிக்கொடி மீட்பு

(எழுதுமட்டுவாள்)

குளத்தில் குளிக்கச்சென்ற பெண் ஒருவரின் காணாமல் போன எட்டு பவுண் தாலிக்கொடி மீட்கப்பட்ட சம்பவம் பெரிய பளையில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம்பற்றி கூறப்படுவதாவது: பெரிய பளையைச் சேர்ந்த பா. இராசேஸ்வரி என்பவர் குளத்தில் குளிக்கும் போது தமது தாலிக்கொடியைக் கழற்றிகரையில்வைத்துவிட்டு குளித்துவிட்டு வீடு சென்று தாலிக்கொடியை பார்த்தபோது தாலிக்கொடியைக் காணவில்லை. குளக்கரைக்கு சென்று பார்த்தபோது அங்கும்தாலிக்கொடி இல்லாததால் பளை காவல் துறையினரிடம் முறைப்பாடு செய்தார்.

பின்பு இரு நாட்களின்பின் குளக்கரைக்கு சென்றபோது அதே இடத்தில் தாலிக்கொடி கண்டெடுக்கப்பட்டது

(கி 170)

'அகதி மாணவர்க்கு இடமளித்த அதிபர்'

(யாழ்ப்பாணம்)

அகதிகளாக வந்த எமது மாணவர்களுக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம் ஒதுக்கி, கல்விக்கு புகலிடமளித்த முன்னாள் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. கி. சிவசரவணபவன் (சிற்பி) அவர்களின் தொண்டை எம்மால் மறக்கமுடியாது.

இவ்வாறு தற்காலிகமாக வைத்தீஸ்வராக் கல்லூரியில் இயங்கும் சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலய அதிபர் கு. கணேசலிங்கம், சரவணை நாகேஸ்வரி, மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தால் சிற்பிக்கு அளித்த பாராட்டு வைபவத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது திரு. சிவசரவணபவன் எமது ஆசிரிய உலகத்தில் இருந்து ஓய்வுபெற்றாலும், ஓய்வுபெற இயலாத படைப்பிலக்கியத் துறையில் பல ஆக்கங்களை உருவாக்குவார் என்றார்.

விழாவில் சிற்பியின் பெருந்தன்மையைப் பாராட்டி பலர் பேசினர்கள். ஈற்றில் அபிவிருத்திச்சங்கச் செயலாளர் சு. சோமசேகரம் நன்றியுரை கூறினார். (சு-கி)

அமெரிக்காவில் பனிப்புயல்
100 பேர் பலி

(நியூயோர்க்)

அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் வீசிய கடும் பனிப்புயல் காற்றினால் 100க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்தனர். ஆயிரக் கணக்கானோர் வீடுகளை இழந்து வீதிகளில் தங்கியுள்ளனர்.

அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ள 12 மாநிலங்களும் இந்தப் பனிப்புயலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதால், இந்த இடங்களிலுள்ள விமான நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதுடன் மின்சாரம், வீதிப் போக்குவரத்து அனைத்தும் தடைப்பட்டன.

இந்த நூற்றாண்டில் வீசிய மிகமோசமான பனிப்புயல் காற்று இதுவே எனக்கூறப்படுகிறது (வி-இ)

பேடன் பவல் தினம்

(யாழ்ப்பாணம்)

பேடன்பவல் சிந்தனைநாள் வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று திங்கட்கிழமை வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யாழ் மாவட்ட ஆணையாளர் திருமதி சி. குணரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அவர் தனதுஉரையில் கூறியதாவது: இலங்கைச் சிறுசாரணியச் சிறுமியர் இயக்கம் தனது அயராத உழைப்பினால் உலக சங்கத்தின் நன்மதிப்பைப்பெற்றுள்ளது எனவே சாரணர், சாரணிய வாக்குறுதிச் சட்டங்களுக்கு ஏற்ப நடந்து நற்சேவை செய்து சங்கத்திற்கும் நாட்டிற்கும் அரும்பெரும் தொண்டாற்ற வேண்டும் என்றார்.

கல்லூரி அதிபர் செல்வி இராசரட்ணமும் இவ்வைபவத்தில் பேசினார். (இ)

மாதகல் முகாமிலிருந்து
ஷெல் தாக்கு

(பண்டத்தரிப்பு)

மாதகல் இராணுவமுகாமிலிருந்து நேற்று முன்தினமிரவு பண்டத்தரிப்பு,பெரியவிளான் ஆகிய பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. துப்பாக்கிப்பிரயோகமும் சரமாரியாக மேற்கொள்ளப்பட்டது.

கடந்த சனிக்கிழமையன்று இரவும் மேற்படி முகாமிலிருந்து ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (72-இ)

ஒத்திவைப்பு பிரேரணை நாடாளுமன்றில் தோல்வி

(புதுடில்லி)

பம்பாயில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்கள் தொடர்பாக எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த ஒத்திவைப்பு பிரேரணை நேற்று தோல்வியடைந்தது.

இப்பிரேரணைக்கு எதிராக 148 எம்பிக்களும் 106எம்பிக்கள் ஆதரவாகவும் வாக்களித்தார்கள் மூவர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

பி. ஜே. பி. தலைவர் எல். கே. அத்வானியன் வற்புறுத்தலுக்கு அமையவே மேற்படி பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. (இ-ஏ)

குமண இன்று
திருமலை புறப்படுகிறது

(திருநெல்வேலி)

குமண இன்று பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கு புறப்பட்டுச்செல்லும். இக்கப்பலில் கச்சேரி கல்வித் திணைக்கள மற்றும் நிறுவன அதிகாரிகள் செல்ல உள்ளனர்: கிராம சேவையாளர்களுக்கு நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை விபரங்களும் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சையின் விடைத் தாள்களும் இக்கப்பலில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

திருகோணமலையில் இருந்து எதிர்வரும் 18ம் திகதி குமண நோயாளர்களையும் மற்றும் பொருட்களையும் ஏற்றிக் கொண்டு மீண்டும் யாழ்ப்பாணம் வரஇருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157-இ)

கலந்துரையாடல்

(எழுதுமட்டுவாள்)

வேம்படுகேணி பனை கிராம அபிவிருத்திசங்கத்தின் மீள் பயிசிலனை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை காலை 10மணிக்கு பனை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறும். (170)

கிரிக்கெட்

இலங்கை 408—8

(கொழும்பு)

இலங்கைக்கு - இங்கிலாந்துக்குமிடையில் கொழும்பில் நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் நேற்றைய 3-ம் நாள் ஆட்ட முடிவில் இலங்கை 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 408 ஓட்டங்களைப் பெற்றது. வி

பீரங்கி படகு தாக்கு

(எழுதுமட்டுவாள்)

நேற்றுக்காலை 9.00 மணியளவில் கிளாலிக் கடல் பரப்பிலிருந்து பீரங்கிப் படகு ஒன்று கறுக்காய் பகுதியையும் கடல் கரையையும் நோக்கி துப்பாக்கி பிரயோகமும் ஷெல் தாக்குதலும் மேற்கொண்டது. [170-இ]

கலை, விவசாய

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

றும் அடங்கும்.

மேலதிக விபரங்களை 182, கண்டி வீதியிலுள்ள தலைமைச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது (161)

தமிழக சட்டப்பேரவையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாத விபரங்களை பேசலாகாதெனக் உறுப்பினர்கள் கூச்சலிட்டனர்.

இக்கருத்தை பேரவை தலைவர் ஆமோதித்து, திரு. அப்போன்ஸை விடயத்தை சுருக்கமாக விளக்குமாறு கூறினார்.

இதையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்திற்கும் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையாவுக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் குறுக்கிட்டு திரு அப்போன்ஸ தாக்கியவர்கள் காங்கிரஸ்காரரே என்றும் கூறினார்.

இதனால் இரு பகுதியினரிடையேயும் கூச்சலும் குழப்பமும் சுமார் 15 நிமிடங்கள் வரைஏற்பட்டது. (கே-சி)

இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்பிராந்திய பொதுச்சபைக் கூட்டம் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் இன்று புதன்கிழமை பி. ப. 3 00 மணிக்கு நடைபெறும். (இ)

ஓய்வூதிய பணிக்கொடைகள் வந்தன

(மானிப்பாய்)

கொழும்பிலிருந்து 121 பேரின் ஓய்வூதியப் பணிக்கொடைகள் யாழ். செயலக ஓய்வூதியப்பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 88 சிவில் ஓய்வூதியம் பெறுபவர்களினதும், 33 விதவைகள் ஓய்வூதியம் பெறுபவர்களினதும் பணிக்கொடைகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

மட்டக்களப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் இன அழிப்பை புரிந்து வரும் இனவாத ஸ்ரீலங்கா அரசு தனது தகவல் தொடர்பு சாதனங்களில் உண்மைக்குப் புறம்பான செய்திகளையும் வெளியிட்டு வருகிறது.

ஸ்ரீலங்கா படையினரின் மனிதப் படுகொலைகளால் பாதிக்கப்படுபவர்கள் தென்பகுதி கிராமங்களில் வாழும் அப்பாவித் தமிழர்களே

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா சனாதிபதி ஆடைத் தொழிற்சாலைகளைத் திறந்து வைக்கும் அதேவேளையில், மட்டக்களப்பில் தமிழ்த் தொழிலாளர்கள் கொடூரமான முறையில் கொலைப்படுகிறார்கள்.

சிங்கள அரசின் இக்கொடூரச் செயலைத் தடுத்து நிறுத்த, மனிதாபிமானம் மிக்க சிங்களப் பொதுமக்களும், உலக சமுதாயமும் முன்வரவேண்டும்.

இப்படுகொலைகளின் மூலம் இப்பகுதிகளில் தமிழ்ப் பொது மக்களை முற்றாக அழிப்பதே சிறிலங்கா அரசின் முக்கிய நோக்கமாகும். (அ)

சீக்கிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய அரசுக்கும், பஞ்சாப் மாநில அரசுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே தாம் இந்த வெடிகுண்டுகளை வெடிக்க வைத்ததாக, பஞ்சாப் போராளிக் குழுக்களில் ஒன்றான ‘காலிஸ்தான் கமாண்டோ’’ போராளிக் குழுவின் முக்கியஸ்தர் ஒருவர் பி. ரி. ஐ. செய்தி நிறுவனத்துக்கு தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார். (இ. வி)

அ. தி: மு. க.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்கத்தாவில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏதாவது காரணம் காட்டி செல்வி ஜெயலலிதாவின் ஆட்சியை கவிழ்ப்பதற்கு இந்திரா காங்கிரஸ் கட்சியும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தலைமையிலான ஜனதாக் கட்சியும் தீவிர முயற்சி செய்து வருவதாக தெரிவித்தார்.

இதற்கிடையில் பி. ஜே. பி.க்கும் அ. தி. மு. க.வுக்கும் இடையில் கருத்தொற்றுமை நிலவுவதாகவும் பி. ஜே. பி. செயலர் தெரிவித்துள்ளார். (அ)

மன்னார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசாலைப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கோஷ்டி ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் திடீரெனத் தாக்குதல் மேற்கொண்டதில் மூவர் அதே இடத்தில் பலியானதாக, இராணுவப்பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்

திருமலையில் நாவல என்ற காட்டுப் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினரை நோக்கி விடுதலைப் புலிப்போராளிகள் தாக்குதல் நடாத்தியுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கொழும்பில் நேற்று தெரிவித்தனர்.

தாக்குதல் நடைபெற்ற இடங்களில் ஆங்காங்கு இரத்தக்கறைகள் காணப்பட்டதாவும் ஆயினும் படையினர் தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல்கள் எதனையும் அதிகாரிகள் தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

எனினும் மன்னாரில் பொலிசார் மீது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு சில மணி நேரத்துக்கு முன்பதாக திருமலை தாக்குதல் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விரு தாக்குதல்களும் 24மணிநேரத்துள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (வி-க-இ)

க. பொ. த. (உ|த) பரீட்சை விண்ணப்பங்கள்

(திருநெல்வேலி)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெற உள்ள க.பொ.த.) உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன

இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்னதாக தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்க முடியும். எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்ப படிவங்கள் இதுவரை பாடசாலைக்கு அனுப்பப்படவில்லை எனவும் அவை கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேரவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. 157-இ)

புத்தூரில் மினி பஸ் விபத்து:
6 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுப் பிற்பகல் பன்றித்தலைச்சி அம்மன்கோயிலுக்குச் சென்றுவிட்டு மினி பஸ்ஸில் திரும்பி வரும்போது. மினி பஸ் புத்தூர்ப் பகுதியில் பருத்தித்துறை வீதியில் விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தோர் விபரம் வருமாறு: செல்வி ரூபவதனி கணேஷ் கிருஷ்ணன் கோயிலடி, மானிப்பாய் வடக்கு, சுப்பிரமணியம் செல்வரட்ணம் (56 வயது) சுபாஸ் ஒழுங்கை, சுண்டுக்குழி), திருமதி கமலாம்பிகை சிவானந்தன் (33வயது) சுபாஸ்ஒழுங்கை,சுண்டுக்குழி, ஏ ஸ்ரனிஸ்லாஸ (57 வயது) கடற்கரை வீதி, யாழ்ப்பாணம், செல்வி ராஜீ ஸ்ரனிஸ்லாஸ் (26 வயது) கடற்கரை வீதி, யாழ்ப்பாணம், பூதத்தம்பி சிவராசன் (15 வயது) நீர்வேலி வடக்கு. (56-இ)

வெளியூர் தபால்கள்

(யாழ்ப்பாணம்)

வெளியூர் தபால்களை நாளை புதன்கிழமை நண்பகலுக்கு முன்பாக யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறு வடமாகாண தபால் திணைக்கள சிரேஷ்ட நிர்வாகச் செயலாளர் திரு சடாட்சரநாதன் அறிவித்துள்ளார்.

ஏனைய இடங்களுக்கான தபால்களை நாளைக்காலைக்கு முன் தபாற் கந்தோர்களில் சேர்க்குமாறும் அவர் கேட்டுள்ளார். (159-இ)

குண்டுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி ஏடு ஒன்று நேற்றுத் தெரிவித்தது.

இந்த இரு சகோதரர்களும் குண்டுவெடிப்புச் சம்பவம் நடைபெற்ற கடந்த வெள்ளிக்கிழமை இரவு பம்பாயிலுள்ள தமது ஆடம்பரமான வாசஸ்தலத்தை விட்டு டுபாய்க்குச் சென்று விட்டதாக பொலிசார் தெரிவித்தனர். (வி)

பூநகரி பாதை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விளைதையடுத்துமேற்படி ஐ.நா அதிகாரிகளுக்கும் அரச அதிகாரிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இப்பேச்சுவார்த்தையில் அரச அதிகாரிகளும், இராணுவ உயரதிகாரிகளும்கலந்துகொண்டுள்ளதாகவும், இதன் முடிவுஇன்னும்வெளியிடப்படவில்லையென்றும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன். (வி-இ)

ஐந்து கட்சிகள்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மாவோ பண்டாரநாயக்கா செயல்படுவார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இந்தப் புதிய கட்சியும், லலித் காமினியின் ஐக்கிய தேசிய ஜனநாயகக்கட்சியும் ஒரு சவாலாக உருவாகிவிட்டதாக அரசியல் விமர்சகர்கள் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றியமைப்பதே இருகட்சிகளின் முக்கியநோக்கமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

பம்பாயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் பம்பாயிலுள்ள வங்கிகளும் நேற்று மீண்டும் திறக்கப்பட்டு வழமையான அலுவல்கள் நடைபெற்றன. (இ)

இருவர் கைது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோர்க் நகரில் வர்த்தகச் சதுக்கத்தில் அண்மையில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக்கும் இடையில் தொடர்பு உள்ளதா என்பதனை ஆராயும்பொருட்டு நிபுணர் குழு ஒன்று விரைவில் பம்பாய்க்கு விஜயம் செய்ய உள்ளது. (அ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் பெருமாள்கோவில் மேற்கு வீதி, 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, SriLanka under Licence Number B/10336/B